# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2220/30 - 2021 මාර්තු මස 23 වැනි අඟහරුවාදා - 2021.03.23

*2220/30 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 23 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

**2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்**

3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை

திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றேன்:-

1. மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் நோக்கத்துக்காக செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமொன்றாக அடையாளம் காணப்பட்ட, கொழும்பில் போர்ட் சிட்டி வளவுகளில் ஐந்து செங்குத்தான குறிப்படக் கோபுரங்களுடனான கொழும்பு சர்வதேச நிதிசார் நிலைய கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்தைத் தாபிப்பதற்கான கருத்திட்டம் பற்றிய இயைபான தகவல்களை உள்ளடக்கிய அறிவித்தல் 2020. யூலை 15 ஆந் திகதிய 2184/15 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டது.

2. கொழும்பில் போர்ட் சிட்டி வளவுகளில் முதல் ஐந்து செங்குத்தான குறிப்படக் கோபுரங்கள் என்றவாறாகவுள்ள கொழும்பு சர்வதேச நிதிசார் நிலைய கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்தைத் தாபிப்பதற்கான கருத்திட்டத்தை செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமொன்றாக அடையாளம் காண்பதற்கும், அத்துடன் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி அத்தகைய கருத்திட்டத்துக்கு வரி விலக்களிப்பை அளிப்பதற்குமான அமைச்சரவை அங்கீகாரம், சொல்லப்பட்ட சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி 2020, ஒற்றோபர் 26 ஆந் திகதியன்று பெறப்பட்டுள்ளது.

3. செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டத்தின் பெயரானது, "**கொழும்பு சர்வதேச நிதிசார் நிலைய** (CIFC) **கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டம்**" ("கருத்திட்டம்") என்பதாக இருத்தல் வேண்டும்.


1A - PG 5363 — 550 (2021/03)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

4. கருத்திட்டமானது, பின்வருமாறு இரண்டு (02) கட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும் :

கட்டம் I

ஒரு சர்வதேச தரம் A உயர்நிலை அலுவலகக் கோபுரம், இரு உயர்முனை வதிவிடக் கோபுரங்கள் மற்றும் ஒரு சில்லறை நெடுமேடைப் பீடம் ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.

கட்டம் II

இரண்டு சர்வதேச தரம் A உயர்நிலை அலுவலகக் கோபுரங்கள் மற்றும் ஒரு சில்லறை நெடுமேடைப் பீடம்.

5. கருத்திட்டமானது, முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறாக, இலங்கை முதலீட்டுச் சபைக்கும் கருத்திட்டத்தின் நிறைவேற்றுகையைப் பொறுப்பேற்கும் நோக்கத்துக்காகக் கூட்டிணைப்புச் செய்யப்படவுள்ள கம்பனிக்கும் ("கருத்திட்டக் கம்பனி") இடையே செய்யப்பட்ட கருத்திட்ட உடன்படிக்கைத் திகதியிலிருந்து தொண்ணூற்றாறு (96) மாதங்களுக்குள் அதன் வர்த்தகத் தொழிற்பாடுகளைத் தொடங்குதல் வேண்டும். கருத்திட்டக் கம்பெனி, மேற்சொல்லப்பட்ட கருத்திட்ட உடன்படிக்கைத் திகதியிலிருந்து நாற்பத்தெட்டு (48) மாதங்களுக்குள் கருத்திட்டத்தின் கட்டம் I ஐப் பூர்த்திசெய்தல் வேண்டும். கருத்திட்டத்தின் கட்டம் II இன் நிறைவேற்றுகையைப் பொறுப்பேற்கும் நோக்கத்துக்காக இலங்கையில் கூட்டிணைப்புச் செய்யப்படவுள்ள கருத்திட்டக் கம்பெனி அல்லது தனியான ஒரு கம்பனி, முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறாக, கருத்திட்டக் கம்பெனியின் சாட்டுதல் பெறுநராக (அனுமதியளிக்கப்பட்ட சாட்டுதல் பெறுநர்) கட்டம் I நிறைவு செய்யப்பட்ட திகதியிலிருந்து நாற்பத்தெட்டு (48) மாதங்களைக் கொண்ட காலப்பகுதியொன்றினுள் ("கருத்திட்ட நடைமுறைப்படுத்தற் காலப்பகுதி") கட்டம் II ஐயும் பூர்த்திசெய்தல் வேண்டும்.

6. அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டவாறாக கருத்திட்டமானது, இக்கட்டளைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சட்டவாக்கங்களின் ஏற்பாடுகள் ஏற்புடைமையாவதிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அவை, குறித்துரைக்கப்பட்ட வரையறைகளுக்கமைய கருத்திட்டக் கம்பெனிக்கு அத்துடன்/அல்லது அதனது அனுமதியளிக்கப்பட்ட சாட்டுதல் பெறுநருக்கு ஏற்புடையதாதலும், இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறான காலப்பகுதிக்கு நடைமுறையில் இருத்தலும் வேண்டும்.

**அட்டவணை**

*(1)* ***2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம்***

**கூட்டிணை வருமான வரி**

"வரி விலக்களிப்பு காலப்பகுதி"

இலங்கை முதலீட்டுச் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான வரிமதிப்பீட்டாண்டிலிருந்து கணிக்கப்பட்டு பின்வருவனவற்றிலிருந்து தோற்றுவிக்கப்பட்ட இலாபங்களின் மீதும் வருமானத்தின் மீதும் வருமான வரி விதித்தல் தொடர்பான 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் :

(i) இருப்பிடக்கூறுகளின் விற்பனை நீங்கலாக அங்கீகரிக்கப்பட்ட செயற்பாடுகளிலிருந்து, பதினைந்து (15) ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதி ஒன்றுக்கு ஏற்புடையனவாதலாகாது.

(ii) இருப்பிடக்கூறுகளின் விற்பனையிலிருந்து, ஆறு (06) ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதியொன்றுக்கு ஏற்புடையனவாதலாகாது.

கருத்திட்டக் கம்பனியின் முழுச் செயற்பாடுகளுக்குமான சொல்லப்பட்ட வரிவிலக்களிப்புக் காலப்பகுதி, கருத்திட்டக் கம்பனியானது எந்த ஆண்டில் வரிவிதிக்கப்படற்பாலதான இலாபத்தை ஈட்டுகின்றதோ அந்த ஆண்டிலிருந்து அல்லது கருத்திட்டத்தின் வர்த்தகத் தொழிற்பாடுகள் தொடங்கியதிலிருந்து மூன்றாண்டுகளுக்குப் பின்னர், இவற்றுள் எது முன்னர் நிகழ்கின்றதோ அதிலிருந்து தொடங்கும்.

*"சலுகை முறையிலான காலப்பகுதி"*

*வரிவிலக்களிப்புக் காலப்பகுதி முடிவுற்ற பின்னர், ஆண்டொன்றுக்கு ஏழு சதவீத (7%) சலுகை முறையிலான வரி வீதம் அல்லது சுற்றுலாப் பயணத்துறைக்கு ஏற்புடையதான கூட்டிணை வரி வீதத்தின் ஐம்பது சதவீதத்துக்கு (50%) சமமான வீதமொன்று, இருப்பிடக்கூறுகளின் விற்பனை தவிர, பத்து (10) ஆண்டுகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட செயற்பாடுகளிலிருந்து தோற்றுவிக்கப்பட்ட இலாபம் மற்றும் வருமானத்தின் மீது ஏற்புடையதாதல் வேண்டும்.*

*இருப்பிடக்கூறுகளின் விற்பனையிலிருந்து தோற்றுவிக்கப்பட்ட இலாபங்களுக்காகவும் வருமானத்துக்காகவும், ஆறு (06) ஆண்டுகளைக் கொண்ட வரிவிலக்களிப்புக் காலப்பகுதி முடிவுற்ற பின்னர், நிலவுகின்ற கூட்டிணை வரி ஏற்புடையதாகும்.*

*ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, மேற்சொல்லப்பட்ட வரிவிலக்களிப்புக் காலப்பகுதியும் சலுகை முறையிலான காலப்பகுதியும் முடிவுற்ற பின்னர், கருத்திட்டக் கம்பனியின் இலாபமும் வருமானமும் தொடர்பிலான வருமான வரி, அப்போதைக்கு வலுவிலுள்ள 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி ஏற்புடையதாதல் வேண்டும்.*

***பங்கிலாப வரி***

*விலக்களிக்கப்பட்ட இலாபத்திலிருந்து பங்குதாரர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட பங்கிலாபங்கள், பதினைந்து (15) ஆண்டுகளைக் கொண்ட சொல்லப்பட்ட வரிவிலக்களிப்புக் காலப்பகுதியின்போதும், அதன் பின்னர் ஓர் (01) ஆண்டின் போதும், வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.*

***பிடித்துவைத்தல் வரி***

*கருத்திட்டக் கம்பனி, பின்வருவனவற்றின் மீது பிடித்துவைத்தல் வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்;*

*(அ) முகாமைத்துவக் கட்டணங்களின் மீதும் அரசுரிமைப் பணக் கொடுப்பனவுகளின் மீதும்; ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய விதிப்பனவுகளின் மொத்தம், முழு மொத்தத் தொழிற்பாட்டு அரசிறையின் மூன்று சதவீதத்தை (3%) விஞ்சுதலாகாது;*

*(ஆ) சந்தைப்படுத்தல் கட்டணங்களின் மீது; ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய கட்டணங்களின் மொத்தம், முழு மொத்தத் தொழிற்பாட்டு அரசிறையின் ஒன்று தசம் ஐந்து சதவீதத்தை (1.5%) விஞ்சுதலாகாது;*

*(இ) ஊக்குவிப்பு முகாமைத்துவக் கட்டணங்களின் மீது; ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய கட்டணங்களின் மொத்தம், முழு மொத்தத் தொழிற்பாட்டு இலாபத்தின் பத்து சதவீதத்தை (10%) விஞ்சுதலாகாது;*

*(ஈ) வெளிநாட்டுக் கடன் மீதான வட்டியின் மீதும், மூலதனச் செலவினத்துக்காகப் பெறப்பட்ட தனிசு மீதும், தொழில்நுட்பக் கட்டணத்தின் மீதும்.*

***உழைக்கும்போது செலுத்தும் வரி/ சொந்த வருமான வரி***

*கருத்திட்ட நடைமுறைப்படுத்தற் காலப்பகுதியின் போது, கொடுக்கப்பட்ட எந்த நேரத்திலும் முப்பது (30) அதிகபட்ச எண்ணிக்கை வரையிலான வெளிநாட்டு பணியாட்டொகுதியினர், ஏற்புடையதான உழைக்கும்போது செலுத்தும் வரியிலிருந்து (PAYE)/ சொந்த வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.*

*மேலும், கருத்திட்டக் கம்பெனி, மிகச் சிறந்த முயற்சி என்ற அடிப்படையின் மீது உள்நாட்டு ஊழியர்களின் மூலம் வெளிநாட்டுப் பணியாட்டொகுதியினரைப் படிப்படியாக மாற்றீடு செய்வதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.*

பின்வரும் ஊழியர் தொடர்பான பொறுப்புக்களையும் கருத்திட்டக் கம்பெனி பயன்படுத்துவதற்கு உடன்பட்டுக் கொள்ளப்படுகின்றது :

| | | |
|---|---|---|
| தேர்ச்சியற்ற தொழிலாளர் தேவைப்பாடு | : | உள்நாட்டில் 75% பெறப்படுதல் வேண்டும். |
| தேர்ச்சிபெற்ற தொழிலாளர் தேவைப்பாடு | : | உள்நாட்டில் 65% பெறப்படுதல் வேண்டும். |
| உயர்நிலை வேலையாட்கள் | : | உள்நாட்டில் 75% பெறப்படுதல் வேண்டும். (கருத்திட்டக் கம்பெனிக்கு அனுமதி அளிக்கப்படின், உயர்நிலை வேலையாட்களுக்கு வெளிநாட்டு நாணயத்தில் சம்பளம் செலுத்தப்படுதல் வேண்டும்.) |

(2) ***2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் (VAT) சட்டம்***

இலங்கை முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டவாறுக கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காகத் தேவைப்படும் கருத்திட்டம் தொடர்பான பண்டங்களின் மற்றும் சேவைகளின் எல்லா இறக்குமதிகளும் கருத்திட்டம் தொடர்பான பண்டங்களின் அல்லது சேவைகளின் உள்நாட்டுக் கொள்வனவுகளும், தொண்ணூற்றாறு (96) மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்காக, திருத்தப்பட்டவாறான 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் கீழ் சேர்பெறுமதி வரிக் கொடுப்பனவிலிருந்து (VAT) முழுமையாக விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

VAT விலக்களிப்பானது கருத்திட்டக் கம்பனிக்கான/ கருத்திட்டத்துக்கான நேரடி வழங்கல்களுக்கு மட்டுமல்லாமல், 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தில் விதித்துரைக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டவாறு கருத்திட்டக் கம்பனிக்கான/கருத்திட்டத்துக்கான வழங்கல்களுக்காக ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு கீழொப்பந்தக்காரர் ஒருவரினால் செய்யப்பட்ட வழங்கல்களுக்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.

கருத்திட்டக் கம்பனியானது, வர்த்தகத் தொழிற்பாடுகள் தொடங்குவதன் மீது, 2002ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறு வழங்கலின் பெறுமதியின் மீது VAT கொடுப்பனவுக்குப் பொறுப்பாதல் வேண்டும்.

(3) ***(235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டம்***

நிர்மாணம் தொடர்பான பொருட்களின் எல்லா இறக்குமதிகளும், தொண்ணூற்றாறு (96) மாதங்களைக் கொண்ட கருத்திட்ட நடைமுறைப்படுத்தற் காலப்பகுதியின்போது கருத்திட்டத்தின் நோக்கத்துக்காக, இலங்கை முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டவாறு சுங்கத் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்படும். பண்டங்கள் கருத்திட்டக் கம்பனியின் பெயரில் அனுப்பப்படின், கருத்திட்டக் கம்பனியினால் நேரடியாக இறக்குமதி செய்யப்பட்டாலும், அல்லது ஒப்பந்தக்காரர்களினூடாகப் பெறப்பட்டாலும், கருத்திட்டத்துக்காகத் தேவைப்பட்ட நிர்மாணம் தொடர்பான பொருட்களின் எல்லா இறக்குமதிகளும் தொண்ணூற்றாறு (96) மாதங்களைக் கொண்ட கருத்திட்ட நடைமுறைப்படுத்தற் காலப்பகுதியின்போது கருத்திட்டத்தின் நோக்கத்துக்காக (புதிய சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் இலங்கை முதலீட்டுச் சபையினால் அல்லது ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறு) சுங்கத் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

இணைக்கப்பட்ட ஏற்பெதிர் பொருட்பட்டியலிலுள்ள பொருட்கள், அத்தகைய பொருட்கள் ஒன்றில் முழுமையாக இலங்கையில் தயாரிக்கப்படாதிருந்தாலொழிய அல்லது கருத்திட்டப் பூர்த்திக்காகத் தேவைப்படும் போதிய தரத்திலும் அளவிலும் மற்றும் காலவரையறைகளினுள்ளும் கிடைக்கத்தக்கவையாக இல்லாதிருந்தாலொழிய, அவை தீர்வையின்றி இறக்குமதி செய்யப்படுவதற்கு அனுமதிக்கப்படவும் மாட்டாது.

ஆகவே, பொதுவாக, நிர்மாணம் தொடர்பான பண்டங்களை, அத்தகைய பண்டங்களின் அனுப்புபொருட் பெறுநராகக் கருத்திட்டக் கம்பனியின் பெயர் குறிப்பிடப்பட்டால் மட்டுமே, மேலே ஏற்பாடு செய்யப்பட்டவாறு தொண்ணூற்றாறு (96) மாதங்களைக் கொண்ட கருத்திட்ட நடைமுறைப்படுத்தற் காலப்பகுதியினுள் கருத்திட்டம் தொடர்பில் ஓர் ஒப்பந்தக்காரரினூடாக அல்லது கீழொப்பந்தக்காரரினூடாக இறக்குமதி செய்ய முடியும். ஆகையால், அத்தகைய இறக்குமதிகள் வேறெவையேனும் இறக்குமதிகளுடன் சேர்த்து இறக்குமதி செய்யப்பட்டிருப்பின், இதன்கண் குறிப்பிடப்பட்ட சலுகைகள் கருத்திட்டக் கம்பனியின் நிர்மாணம் தொடர்பான பண்டங்களுக்கு மட்டுமே

*கிடைக்கக்கூடியவையாக இருக்க வேண்டுமென்பதை உறுதிப்படுத்துவதற்கு கருத்திட்டக் கம்பனி தனியாக பொறுப்பாதல் வேண்டும். அவ்வாறாயின், எக்காரணத்துக்காகவேனும் இந்நிபந்தனை மீறப்பட்டிருப்பின், அந்நேரத்தில் நிலவுகின்ற சட்டங்களினதும் ஒழுங்குவிதிகளினதும் கீழ் செலுத்தப்படற்பாலனவான வரிகளும் அறவீடுகளும் கருத்திட்டத்துக்கான நிர்மாணம் தொடர்பான பண்டங்களின் பாகமாக அமையாத எல்லாப் பண்டங்களுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வரிகள் உடனடியாகச் செலுத்தப்படத்தக்கவையாக வருதலும் வேண்டும். கருத்திட்டக் கம்பனியினது எவரேனும் ஊழியரின், ஆலோசகரின் அல்லது வேறெவரேனும் ஆட்களின் தனிப்பட்ட/ சொந்தப் பயன்பாட்டுக்காக கருத்திட்டக் கம்பனியினால் இறக்குமதி செய்யப்பட்ட எவையேனும் தனிப்பட்ட பொருட்கள், கருத்திட்டம் தொடர்பான பண்டங்களாகக் கருதப்படுதலாகாதெனக் குறிப்பிடப்படுகின்றது.*

***(4) 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்***

*துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டின்* (PAL) *கொடுப்பனவும் விதிப்பனவும், தொண்ணூற்றாறு (96) மாதங்களைக் கொண்ட கருத்திட்ட நடைமுறைப்படுத்தற் காலப்பகுதியின் போது (கம்பெனியால் நேரடியாக இறக்குமதி செய்யப்பட்டிருப்பினும் சரி அல்லது ஒப்பந்தக்காரர்களினூடாகப் பெறப்பட்டிருப்பினும் சரி) கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கை முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டவாறாக எல்லாப் பொருட்களின் மீதும் முழுமையாக விலக்களிக்கப்படுதல் வேண்டும்.*

***(5) 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம்***

*(புதிய சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் இலங்கை முதலீட்டுச் சபையினால் அல்லது ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறு) கருத்திட்டம் தொடர்பான பொருட்களின் இறக்குமதி, தொண்ணூற்றாறு (96) மாதங்களைக் கொண்ட கருத்திட்ட நடைமுறைப்படுத்தற் காலப்பகுதியின் போது ஆயவரிக் கொடுப்பனவிலிருந்து* (CESS) *விலக்களிக்கப்படுதல் வேண்டும்.*

***மஹிந்த ராஜபக்ஷ*** *(பா.உ.),*
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2021, மாச்சு 23.*

*04-264*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*